## கடற்றொழில், நீரியல்வள மற்றும் சமுத்திர வள அமைச்சு

### இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA)

# வெற்றிடங்கள்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகமை கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. பணிப்பாளர் (பரவலாக்கள்) பதவி - HM - 1-1 - 2025
## 02. பணிப்பாளர் (கரையோரம்) பதவி - HM - 1-1 - 2025
## 03. பணிப்பாளர் (நன்னீர்) பதவி - HM - 1-1 -2025

**தகமை மற்றும் அனுபவம் : வெளி விண்ணப்பதாரர்கள்**

(அ). பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞான பொது பட்டம் அல்லது விலங்கியல் அல்லது நீரியல் வாழ் உயிரின செய்கை / மீன்பிடி செயற்பாடுகள் தொடர்பான சிறப்பு விஞ்ஞான பட்டம் அல்லது உணவு விஞ்ஞான மற்றும் போசாக்கு / விவசாய / கால்நடை வைத்திய விஞ்ஞானம் தொடர்பான ஆரம்பப் பட்டம்.

மற்றும்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நீரியல் வாழ் செய்கை / மீன்பிடி விவகார துறைக்குரியதான பட்டப்பின் படிப்பு தகமை (விஞ்ஞானமானி / தத்துவமானி) மற்றும் கூட்டுத்தாபனம், நிலையியற் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ மட்டத்தின்" பதவியில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

(அ). NAQDA வில் மீன்வளர்ப்பு / நன்னீர் / கடலோர / விரிவாக்கப் பணி முகாமைத்துவம் (MM) I தர பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் சேவையாற்றியிருத்தல்.

## 04. உதவிப் பணிப்பாளர் பதவி (மானிட வள அபிவிருத்தி) MM 1 - 3 -2025

**தகமை மற்றும் அனுபவம் : வெளி விண்ணப்பதாரர்கள்**

(அ). முகாமைத்துவ / மானிட வளம் தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் மற்றும் அரச திணைக்களமய / நிலையியற் சபை நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் ஒரு வருடகால (01) நிருவாக அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

(அ). அதிகார சபையில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் குறைந்தபட்சம் ஐந்து வருடகால (05) சேவை அனுபவம்.

## 05. மீன் நோயியல் நிபுணர் பதவி - MM 1 - 3 -2025

**தகமை மற்றும் அனுபவம் : வெளி விண்ணப்பதாரர்கள் :**

(அ). பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலம் உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான பொது விஞ்ஞானப் பட்டம் அல்லது விலங்கியல் விஞ்ஞான அல்லது கடற்றொழில் / நீரியல் வாழ் செய்கை தொடர்பான துறைகளில் விஞ்ஞான விசேட பட்டம் அல்லது உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு / விவசாய / கால்நடை வைத்திய விஞ்ஞான பட்டம் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் அதற்கு சமமான தகமையினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

முதலாவது பட்டத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பதவியிற்கு உரியதான துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ). மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தேசிய தொழில்சார் தகமை 7 ஆவது மட்டத்தினை விட குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

(ஆ). பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலம் உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான பொது விஞ்ஞானப் பட்டம் அல்லது விலங்கியல் அல்லது மீனவ / நீரியல் வாழ் செய்கை தொடர்பான துறைகளில் விஞ்ஞான விசேட பட்டம் அல்லது உணவியல் விஞ்ஞான மற்றும் போசாக்கு / கால்நடை வைத்திய விஞ்ஞான பட்டம் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் அதற்கு சமமான தகமையினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

ஆரம்ப பட்டத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் உரிய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(இ). ஆணையத்தின் மீன்வளர்ப்பு/நன்னீர்/கடலோரத் துறையில் கனிஷ்ட முகாமைப் பிரிவில் (JM) குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் அனுபவம்.

## 06. உதவிப் பணிப்பாளர் (நன்னீர்) பதவி - MM 1 - 3 ii தரம் 2025
## 07. உதவிப் பணிப்பாளர் (பரவலாக்கள்) பதவி - MM 1 - 3 ii தரம் 2025

**தகமை மற்றும் அனுபவம் : வெளி விண்ணப்பதாரர்கள் :**

(அ). பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கம் ஒன்றின் மூலம் உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான பொது விஞ்ஞானப் பட்டம் அல்லது கால்நடை விஞ்ஞான அல்லது மீனவ / நீரியல் வாழ் செய்கை தொடர்பான துறைகளில் விஞ்ஞான விசேட பட்டம் அல்லது உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு / விவசாய கால நடை வைத்திய விஞ்ஞான பட்டம் மற்றும் அரச திணைக்களத்தின் / நிலையியற்சபை நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் நீரியல் வாழ் செய்கை / மீனவ செயற்பாடுகள் தொடர்பாக (01) வருடகால அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

(ஆ). அதிகார சபையின் நீரியல் வாழ் செய்கை / பரவலாக்கள் துறையில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) பதவியில் குறைந்தபட்சம் (5) ஐந்து வருட கால அனுமபவத்தினைப் பெற்றிருத்தல்.

## 08. நீரியல் வாழ் செய்கையாளர் பதவி - JM - 1-1 ii தரம் 2025
## 09. மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கள் உத்தியோகத்தர் பதவி - JM - 1-1 ii தரம் 2025

**தகமை மற்றும் அனுபவம் : வெளி விண்ணப்பதாரர்கள் :**

(அ). பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயிரியல் - விஞ்ஞானம் தொடர்பான பொது விஞ்ஞான பட்டம் அல்லது விலங்கியல் அல்லது மீன்பிடி / நீரியல் வாழ் செய்கை தொடர்பான துறைகளில் விஞ்ஞான விசேட பட்டம் அல்லது உணவு விஞ்ஞான மற்றும் போசாக்கு / விவசாய / கால்நடை விஞ்ஞான பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படட் தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகமை 7 ஆவது மட்டத்தினைவிட குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படட் தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகமை 6 ஆவது மட்டத்தினைவிட குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகமைகள் கிடைத்ததன் பின்னர் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிலையியற் சபை நிறுவகத்தில் குறைந்தபட்சம் (05) வருடகால அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழில். கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படட் தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகமை 5 ஆவது மட்டத்தினைவிட குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகமையினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கூட்டுத்தபானம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிலையியற் சபை நிறுவனத்தில் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகால (10) அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

(அ). வெளி விண்ணப்பதாரர்களினால் வழங்கப்பட வேண்டிய தகமைகளைப் பெற்று இருத்தல்.

அல்லது

(ஆ). புதவிக்குரிய பாடத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் / தொழில்நுட்ப (MA 2-1) ii தரத்தின் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் (05) திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்து இருத்தல்.

## 10. மொழி பெயர்ப்பாளர் பதவி - MA -4 iii தரம் 2025

**தகமை மற்றும் அனுபவம் :**

(அ). க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் விேட திறமைச்சித்தியினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ). பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

மற்றும்

(இ.) அங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பு தொடர்பாக ஒரு வருடகால அனுபவம்

## 11. நீரியல் வாழ் செய்கை உதவியாளர் பதவி - MA 2 - 1 iii தரம் 2025
## 12. நீரியல் வாழ் செய்கை பரவலாக்கள் உத்தியோகத்தர் பதவி - MA 2 - 1 iii தரம் 2025

**தகமை மற்றும் அனுபவம்**

(அ). விவசாய / நீரியல் வாழ் செய்கை / கால்நடை வளம் தொடர்பான டிப்ளோமா அல்லது அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலை நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் (TEC) அங்கீகரிக்கப்பட்ட N.V.Q மட்டம் 5 விட குறையாத வேறு சமமான சான்றிதழ்.

## 13. முகாமைத்துவ உதவியாளர் பதவி - தொழில்நுட்பம் அல்லாத - MA 1 - 1 iii தரம் 2025

**வெளி விண்ணப்பதாரர்கள் : கல்வித் தகமை :**

(அ). க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

மற்றும்

(ஆ). க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் (பொது வினாப்பத்திரம் தவிர)

**உள்ளக விண்ணப்பதாரர்களின் கல்வித் தகமை :**

(அ). க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் அங்கிலம் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

மற்றும்

(ஆ). அதிகார சபையின் ஆரம்ப மட்டம் (பயிற்றப்படாத / பகுதியளவு பயிற்சி / பயிற்சி பெற்ற) பதவியில் குறைந்தபட்சம் ஐந்து வருடகால திருப்பதிகரமான சேவையினை பூர்த்தி செய்திருத்தல்.

## 14. மின் தொழில்நுட்பவியலாளர் / சிவில் தொழில்நுட்ப பதவி - PL 3 - 2025

**வெளி விண்ணப்பதாரர்கள் - தொழில்சார்**

(அ). மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படட் தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட உரிய துறைசார் தேசிய தொழில்சார் தகமை (04) ஆவது மட்டத்தினைவிட குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)**

(அ). வெளி விண்ணப்பதாரர்களினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகமைகளைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ). உரிய துறையில் குறைந்தபட்சம் (05) வருடகால சேவைக்கால அனுபவத்தினைப் பூர்த்தி செய்துள்ள, தொழில்சார் பரீட்சையில் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய தொழில்சார் தகமை மட்டம் (02) இனைவிடக் குறையாத திறமை கொண்ட ஆரம்ப மட்டத்தில் பகுதியளவு பயிற்சி (PL 2) அல்லது பயிற்றப்படாத (PL 1) ஊழியர்கள்.

## பொதுவான நிபந்தனைகள் :

| இல | பதவிப் பெயர் | சம்பளக் குறியீடு | சம்பள அளவு | வயதெல்லை |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் (பரவலாக்கள்) | HM 1 - 1 2025 | 140,640 - 15 x 4100 – 202,140 | 35 வயதினைவிடக் குறையாது மற்றும் 55 வயதினை விட மேற்படாதிருக்க வேண்டும். |
| 02 | பணிப்பாளர் (கரையோரம்) | HM 1 - 1 2025 | 140,640 - 15 x 4100 – 202,140 | |
| 03 | பணிப்பாளர் (நன்னீர்) | HM 1 - 1 2025 | 140,640 - 15 x 4100 – 202,140 | |
| 04 | உதவிப் பணிப்பாளர் (HRM) | MM -1-3 2025 | 96,500 -10 x 2480 – 15 x 3450 – 173,200 | 22 வயதினைவிடக் குறையாது மற்றும் 45 வயதினை விட மேற்படாதிருக்க வேண்டும். |
| 05 | மீன் நோயியல் நிபுணர் | MM -1-3 2025 | 96,500 -10x 2480 – 15 x 3450 – 173,200 | |
| 06 | உதவிப் பணிப்பாளர் (நன்னீர்) | MM 1 - 3 2025 | 96,500 -10 x 2480 – 15 x 3450 – 173,200 | |
| 07 | உதவிப் பணிப்பாளர் (பரவலாக்கள்) | MM 1 - 3 2025 | 96,500 -10 x 2480 – 15 x 3450 – 173,200 | |
| 08 | நீர் வாழ் உயிரின செய்கையாளர் | JM 1 - 1 2025 | 72,650 -10 x1360 – 18 x 2040 -122,970 | |
| 09 | மாவட்ட நீரியல் வாழ் உயிரின செய்கை பரவலாக்கள் உத்தியோகத்தர் விரிவாக்க அலுவலர் | JM 1 - 1 2025 | 72650 -10 x1360 – 18 x 2040 -122,970 | |
| 10 | மொழி பெயர்ப்பாளர் | MA 4 - 2025 | 64,320- 10x 1360 - 15 x 1670 - 5 x 2,040 –113,170 | |
| 11 | நீரியல் வாழ் உயிரின செய்கை உதவியாளர் | MA 2 - 1 2025 | 50,540- 10 x 540 -7 x 630 - 4 x 890 20 x 1,190 –87,710 | |
| 12 | நீரியல் வாழ் செய்கை பரவலாக்கள் உத்தியோகத்தர் அலுவலர் | MA 2 - 1 2025 | 50,540- 10 x 540 -7 x 630 – 4 x 890 20 x 1190 – 87,710 | 18 வயதினைவிடக் குறையாது மற்றும் 45 வயதினை விட மேற்படாதிருக்க வேண்டும் |
| 13 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) | MA 1 - 1 2025 | 46,220 - 10x 540- 7 x 630 – 4x 890 20 x 1,190 – 83,390 | |
| 14 | இயந்திர மின் தொழில்நுட்ப / சிவில் தொழில்நுட்ப | PL 3 - 2025 | 43,280 – 10 x 490- 10 x 540 – 10 x 590 - 12 x 630 - 67,040 | |

* முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள 1/2025 சுற்றறிக்கைக்கு அமைய சம்பளம் தயாரிக்கப்படுகின்றது.

குறிப்பு : உள்ளக விண்ணப்பதாரர்கள் மற்றும் அரசாங்க / மாகாண அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நிலையியற்சபை நிறுவனங்களின் அபேட்சகர்களுக்காக உயர்ந்தபட்ச வயதெல்லை உரியதல்ல.

01. அரச / உள்ளூராட்சி மன்ற திணைக்களம் / கூட்டுத்தாபண / நிலையியற் சபை நிறுவனங்களில் சேவையாற்றுபவர்கள் விண்ணப்படிவங்களை தமது நிறுவனப் பொறுப்பாளர்கள் ஊடாக சமர்பிக்கப்பட வேண்டும்.

➢ விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

➢ பதவியில் கடமையினை மேற்கொள்ளல் மற்றும் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உடல் மற்றும் உள தகமையினைப் பெற்றிருக்க வேண்டும்.

➢ விண்ணப்பதாரர்கள் நன்னடத்தை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

**தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படும் ஏனைய பிரதிலாபங்கள்.**

➢ வைத்திய பிரதிலாபம்

➢ அங்கீகரிக்கப்பட்ட பதவியிற்கான தொழில்சார் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவு

* www.naqda.gov.lk எனும் NAQDA இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட பதவியிற்காக உரியதான விண்ணப்பப்படிவத்தின் மாதிரியிற்கு அமைய பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்படிவத்தினை (சுயவிபர தகவல்கள்) மற்றும் அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளுடன்), விண்ணப்பிக்கும் பதவியினை கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபால் ஊடாக "தலைவர், இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்த, அதிகார சபை இலக்கம் 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரியிற்கு **2025.10.31** ஆம் திகதியிற்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

* இப் பதவியிற்காக NAQDA இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணைய வழி முறை ஊடாகவும் விண்ணப்படிவத்தினை சமர்பிக்க முடியும்.

* இப் பதவிகளுக்குரிய ஏனைய தகவல்கள் NAQDA இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

* இப் பதவியிற்காக ஒன்லைன் முறை அல்லது பதிவுத் தபால் ஆகிய இரண்டு முறைகளில் ஒன்றை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

**தலைவர்,**

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE